மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) திருமலை நாய்க்கர் மகாலை அரும்பொருட் காட்சியகமாக மாற்றும் கருத்து இப்பொழுது எதும் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : திருமலை நாயக்கர் மகாலைப் பாதுகாக்க அது வழி வகுக்கும் அல்லவா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதை ஒரு மியூசியமாக அரும் பொருட் காட்சியாக மாற்றும் குறிப்பு இல்லை. ஆனால், அதைக் கலைப் பொருள்கள் அடங்கிய ஒரு காட்சியகமாக வைக்கலாம் என்றும், அந்த அரண்மனையின் எழில் மறைந்துவிடாத வகையில் அதன் சுவர்ப் புறங்களில் மதுரையின் பண்டைய வரலாற்றிலிருந்து அண்மைக்கால வரலாறு வரையில் இலக்கியங்கள், கல்வெட்டுகள் ஆகியவற்றில் உள்ள வரலாற்றுச் சிறப்புச் செய்திகள் அடங்கியிருக்கும் வகையில் அதனுடைய எழிலைப் பெருக்கலாம் என்ற எண்ணம் இருக்கிறது. பாண்டிய நாட்டு வரலாறு, மற்றவைகளையெல்லாம் ஓவியமாக சிறந்த ஓவியர்களைக் கொண்டு சுவர்களில் வரையலாம். பாண்டிய நாட்டுப் பகுதிகளில் இருக்கிற சிலைகள் மற்றவைகளையெல்லாம் கொண்டு வந்து வைத்து, பார்வையாளர்களுக்குக் கவர்ச்சிகரமாக அமையவேண்டும் என்ற முறையில், பொருள்களைக் கண்டு களிக்கும் வகையில் வைக்கலாம் என்ற ஒரு ஏற்பாடு இருந்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : திருமலை நாயக்கர் மகாலில் முன்பு கோர்ட்டுகளெல்லாம் இருந்தன. இப்பொழுது அந்தக் கோர்ட்டுகள் போய் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. அதனால், இது பாதுகாக்கப்படாமல் இருக்கிறது. அதனைக் கலைப் பொருட் காட்சியகமாக அமைக்க வேண்டும் என்ற கருத்து இருந்தாலுங் கூட, எப்பொழுது அந்த வேலை துவங்கப்படும், அந்தக் கட்டடம் பழுதுபடாமலிருக்க அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது ஒரு ஆண்டுக் காலமாக அது பழுது பார்க்கப்பட்டு வருகிறது. இடையிடையே எழுப்பப்பட்ட குறுக்குச் சுவர்களெல்லாம் அகற்றப்பட்டு, பழுது பார்க்கப்பட்டு, மறுபடியும் புதுப்பிக்கப்படுகிற பணிகளெல்லாம் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பணிகள் முறையாக மேற்கொள்ளப்பட்டதற்குப் பிறகு ஓவியங்கள் வரையவும் சிலைகளைக் கொண்டு வந்து வைக்கவுமான ஏற்பாடுகள் முறைப்படி நடக்கும்.

Coins of Chola Period.

*162 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minsiter for Education and Local Administration be pleased to state—

(*a*) whether Chola coins were recovered about the 16th instant at Tiruchirappalli ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) : அண்மையில் திருச்சிராப்பள்ளியில் சோழர் கால நாணயங்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை.

கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் தொழிற் பயிற்சி ஆசிரியை பதவிகள்.

*163 வினா—திரு கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் இன்னும் நிறைவு செய்யப் படாமலுள்ள இரு தொழிற் பயிற்சி ஆசிரியைகள் (Craft Instructresses) பதவிகளை நிறைவு செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிறைவு செய்யப்பட ஆணைகள் கோரப்பட்ட இரு தொழிற் பயிற்சி ஆசிரியைகளில், ஒரு பதவி 1967ஆம் ஆண்டு எப்ரல் திங்கள் 12-ம் நாள் முதல் இன்று வரைத் தொடர்ந்து பணியில் இருந்து வருகின்றது. மற்றொரு பதவி 1968ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 17ஆம் நாள் முதலிலிருந்து தொடரப்பட்டு 1970ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13ஆம் நாளில் விடுவிக்கப்பட்டது. 1964ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12ஆம் நாளிட்ட ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 574-வது எண் கொண்ட அரசாணையின்படி, பற்றுக் குறை அல்லது உபரி ரூபாய் 10,000-க்கு குறைவாக உள்ள நிதி நிலைமை கொண்ட ஊராட்சி ஒன்றியங்கள், தொழிற் பயிற்சி ஆசிரியைகள் நியமனம் செய்ய, ஊரக வளர்ச்சி இயக்குநரின் ஒப்புதலைப் பெறவேண்டும். எனவே கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தின் நிதி நிலைமையை 1967–68ஆம் ஆண்டிலிருந்து ஆராய்ந்து நிதி வசதி இடம் அளிப்பின், முன்னால் குறிப்பிட்ட அரசாணையில் குறிப்பிட்டவாறு, அவ்விரு தொழிற் பயிற்சி ஆசிரியைகளை நியமனம் செய்யுமாறு, கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் வழியாக, ஊரக வளர்ச்சி இயக்குநரால் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

திரு. கா. வேழவேந்தன் : வளர்ந்து வரும் கைத்தொழில்களினுடைய பயிற்சிகளை அதிகமாக்குவதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் இந்தக் கைத் தொழிற் பயிற்சி ஆசிரியைகளின் எண்ணிக்கையை உயர்த்த அரசாங்கத் திற்கு எண்ணம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த எண்ணத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான தொழிற் பயிற்சி ஆசிரியைகள் நியமிக்கப்படுவார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : From the Hon. Minister's reply, unless the financial position of the Panchayat is all right, no craft instructresses would be appointed. Would the Government revise its policy and whether the financial position is sound or not, appoint craft instructresses?